2003 ஜனவரி 30]

8. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(ஆ) திரு. பரிதி இளம்வழுதியை வரவு–செலவு கூட்டத்தொடர் முடியும் வரை பேரவை நடவடிக்கையிலிருந்து நீக்கி வைத்தல்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. பரிதி இளம்வழுதி மீதான குற்றச்சாட்டை உரிமைக் குழுவிற்கு அனுப்புவதோடு, அவர் அவையிலே இருக்கின்றபோது டாக்டர் குமாரதாஸ் உயிருக்கோ, அவரை ஆதரிப்பவர்கள் உயிருக்கோ ஆபத்து ஏற்படும் என்கிற சூழலும் இருக்கிற காரணத்தால், தொடர்ந்து பட்ஜெட் கூட்டம் முடியும் வரை அவரை அவையிலே பங்கேற்காமல் நீக்கிவைக்க வேண்டுமென்ற தீர்மானத்தையும் நான் மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் அவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், அவை முன்னவர் அவர்களின் தீர்மானம் ஏற்கப்படுகிறது.

திரு. ஐ. கணேசன்: சார், ஆளுநர் உரை வரையுமா? பட்ஜெட் வரையுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பட்ஜெட் வரைக்கும். ஆளுநர் உரை மீதான விவாதம் நாளையோடு முடிந்துவிடுகிறதே!

திரு. ஐ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைமீது நடைபெற்ற விவாதத்தின்போது, இப்போது நடந்த அத்தனை நிகழ்ச்சிகளையும் நாம் அனைவரும் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இங்கே இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர்கள் இங்கே வந்து சத்தம் போட்டது உண்மை. அதை நாங்கள் ஒத்துக்கொள்கிறோம். அதேபோல, இங்கேயிருந்த அருமை நண்பர் அவர்களும் மற்ற உறுப்பினர்களும் எதுவுமே பேசவில்லை என்று ஒப்புக்கொள்கிறீர்களா (குறுக்கீடு) அவர்கள் எதுவுமே வாதிடவில்லையா? 'வா, பார்க்கலாம்' என்று சொல்லவில்லையா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் பரிதி இளம்வழுதி அவர்களுடைய இடத்தை விட்டு தாண்டி வந்து திரு. ரோகிணி அவர்களையும் தள்ளிவிட்டு, குமாரதாஸைப் பார்த்து அப்படி மிரட்டி

இருப்பது முறையற்றது. (குறுக்கீடு) உட்காருங்கள். திரு. கணேசன், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. கணேசன் அவர்கள். தாங்கள் நியாயமானவர், நடுநிலையானவர், என்ன நடந்தது என்பது உங்களுக்குத் தெரியும். உங்களுடைய உறுப்பினர்களிடத்திலே கேட்டுக்கொள்ளுங்கள். பின்னாலே உங்களுடைய உறுப்பினர்கள் இருக்கிறார்கள். விசாரித்துக் கொள்ளுங்கள்.

பிற்பகல் 12-25

திரு. ஐ. கணேசன்: கட்சி உறுப்பினர்கள்தான் நிறுத்தினார்கள். நான் திரும்பிப் பார்க்கும்போது அதைப் பார்த்தேன். ஆனால் அதேபோல அதே வார்த்தைகளை இங்கே இருக்கக்கூடிய உறுப்பினர்கள் பயன்படுத்தினார்களா, இல்லையா? *(கூச்சல்-குழப்பம்)* இங்கே எத்தனை பேர் வந்தார்கள்? *(கூச்சல்-குழப்பம்)* தண்டனை கொடுப்பது என்பதை இந்த கவர்னர் உரையோடு. நாளையோடு முடித்துக்கொள்ளுங்கள். பட்ஜெட் வரைக்கும் என்று சொல்வது ** அர்த்தம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** பரிதி இளம்வழுதி ஏற்கெனவே இதுபோன்ற குண நலன்களோடு இந்த அவையிலே நடந்து, நீக்கப்பட்டிருக்கிறார். இப்பொழுது அவர் நடந்துகொண்டது என்பது மிகவும் முறைகேடானது. அவர் இடத்தை விட்டு தாண்டி வந்து, இருக்கிற உறுப்பினர்களையெல்லாம் தள்ளிவிட்டு வந்து, குமாரதாஸ் அவர்களை மிரட்டுகின்ற அளவிற்கு வந்திருப்பது என்பது—இதே நிலைமை நீடிக்குமானால் சட்டசபையை நான் நடத்த முடியாது. இது திரு. கணேசன் அவர்களுக்கும் பொருந்தும். குமாரதாஸுக்கு இருந்த நிலைமை நாளைக்கு திருகணேசனுக்கு வாராதா? இது எல்லோருக்கும் பொருந்தும். இங்கே வந்து என்னிடத்திலே சத்தம் போடுகிறார்கள். என்னென்ன பேசினார் என்பதை நான் சொல்லவில்லை. நான் தாங்கிக்கொள்கிறேன். ஆனால் உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டியது என்னுடைய கடமை. இதே நிலைமை திரு. பரிதி இளம்வழுதிக்கு வேறொரு உறுப்பினரால் ஏற்பட்டிருந்தாலும்கூட, நடவடிக்கை எடுக்க நான் தயாராக இருக்கிறேன். ஆகவே நடைபெற்ற இந்தத் தவறை நீங்கள் மூடி மறைக்க வேண்டாம். முலாம் பூச வேண்டாம். உங்கள் உறுப்பினரிடத்திலேயே நீங்கள் கேட்டுக்கொள்ளுங்கள். உரிய தண்டனைதான் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தயவுசெய்து நீங்கள் உட்காருங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2003 ஜனவரி 30]

திரு. ஐ. கணேசன்: அவர்கள் வார்த்தையைப் பயன்படுத்தியது நிச்சயமாக ஒத்துக்கொள்ள முடியாது. அதை நாங்கள் ஒத்துக்கொள்கிறோம். அதேபோல, ஆளுங்கட்சியினர் இந்த அடாவடியிலே இந்தத் தகராறிலே நடக்கவில்லையா? (கூச்சல்-குழப்பம்) இதை ஒத்துக்கொள்ள முடியாது. இந்தத் தீர்ப்பு நியாயமான தீர்ப்பு அல்ல. அமைச்சர்களேகூட குறுக்கிட்டுப் பேசுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுங்கட்சியினர் ஓர் எல்லைக்கோட்டை மீறி அவர்கள் போகவில்லை.

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவர் தகாத முறையிலே நடந்துகொள்ளலாம். ஆனால் அமைச்சர் அதற்குப் பதில் சொல்வது தவறா?

திரு. ஐ. கணேசன்: சட்டமன்ற விதிகளை எல்லாம் படித்து தேர்ந்தவர் என்ற முறையிலே ஒவ்வோர் நாளும் குறுக்கிட்டு குறுக்கிட்டு இந்த ஆட்சியில்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நடைபெற்ற தவறுக்கு நீங்கள் நியாயம் கற்பிப்பது சரியல்ல. தயவுசெய்து அமருங்கள். டாக்டர் குமாரதாஸ் நீங்கள் பேசுங்கள்.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மாவட்டம் சம்பந்தமான சில கோரிக்கைகளை மாத்திரம் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவந்து என்னுடைய உரையை நிறைவு செய்யலாம் என்று கருதுகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் தேங்காய்ப்பட்டினம் பகுதியிலே....(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கணேசன் அவர்களே, போதுமான அளவிற்கு உங்களுக்குப் பேச அனுமதித்தாகிவிட்டது. உங்கள் கருத்துகளைச் சொல்ல அனுமதித்தாகிவிட்டது. இந்த விவாதத்தை நீங்கள் நீட்டித்துக்கொண்டிருப்பது முறையல்ல. என்ன சொல்ல வேண்டுமோ அதைச் சொல்லுங்கள்.

திரு. ஐ. கணேசன்: ** இங்கே நடந்துகொண்டதைக் கண்டித்து நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2003 ஜனவரி 30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் சொன்னது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. போங்கள்.

(உறுப்பினர் திருமதி வி. சிவகாமி அவர்களைத் தவிர, எஞ்சிய பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்புச் செய்தனர்.)

7. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—*தொடர்ச்சி*

டாக்டர் தே. குமாரதாஸ்: தேங்காய்ப்பட்டினம் பகுதியிலே ஒரு மீன்பிடித் துறைமுகம் அமைத்துத் தர வேண்டும் என்ற ஒரு கோரிக்கையினை நான் அம்மா அவர்களின் பொற்பாதங்களிலே சமர்ப்பிக்கிறேன். காரணம் பல்லாயிரக்கணக்கான மீனவர்கள் அங்கே மீன்பிடி தொழில் செய்து வருகிறார்கள். அவர்களுக்கு அது பயன்பட வேண்டுமென்ற விதத்திலே, ஆட்சியிலே உங்களுக்கு பல்வேறு பணக் கஷ்டங்கள், சிரமங்கள் இருந்தாலும், சுமார் 10 ஆயிரம் மக்களுடைய வாழ்வு வளம்பெற அந்த மீன்பிடித் துறைமுகத்தை நீங்கள் அமைத்துத் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, எஸ்.பி. மாங்குடி என்ற பகுதி என்னுடைய தொகுதிக்கு உட்பட்ட பகுதி. அங்கே ஒரு பாலம் அமைக்கப்பட வேலை ஆரம்பிக்கப்பட்டு 7 ஆண்டுகள் ஆகிறது. ஆனால் இந்த 7 ஆண்டுகளிலே இதுவரைக்கும், அந்தப் பணியைச் செய்து முடிக்காமல் சுமார் 100 அடி தூரம் கடப்பதற்கு 15 கிலோமீட்டர் சுற்றி வருகிற ஒரு கொடுமை நிலவுகிறது. நான் மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அண்ணன் திரு. பன்னீர்செல்வம் அவர்களிடம் சொல்கிறபோது, விரைவிலே அதை நிறைவேற்றித் தருகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அந்தப் பணி கொஞ்சம் தொய்வு அடைந்திருக்கிறது. அதை வேகப்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல கன்னியாகுமரி மாவட்டத்திலே ஒரு இரப்பர் தொழிற்சாலை வேண்டுமென்ற கோரிக்கை வெகு நாட்களாக இருக்கிறது. நான் கடந்த திராவிட முன்னேற்றக் கழக சர்க்காரிலே கேட்கிறபோது, கலைஞர் என்னிடத்திலே என்ன சொல்வார் என்றால், ரப்பர் அல்லவா, குமாரதாஸ் கொஞ்சம் இழுத்துக்கொண்டுதான் இருக்கும். இப்படியே சொல்லிச் சொல்லி அதனுடைய ஆயுள் நீடித்துக்கொண்டிருக்கிற சூழ்நிலை இருக்கிறது. அந்தத் தொழிற்சாலை வராத ஒரு சூழ்நிலை